Scale D Tempo 122 Style Ballroom> Schlager Alp

2. சிலுவையில் அறையுண்ட இயேசு

சிலுவையில் அறையுண்ட என் இயேசு இரட்சகா (மாற் 15:24)
சிரசில் முள்முடி ஏற்ற என் ஜீவ நாயகா (யோவான் 19:5)
பரியாச சின்னமான சிலுவைதனில் நீரே (எபிரேயர் 6:6)
பரிகாரி ஆனீர் எங்கள் பாவம் போக்கிட(யாத் 15:26) சிலுவை

1

கைகள் கால்கள் ஆணிகள் கடாவியே (யோவான் 20:25)
கர்த்தர் இயேசு கள்வர் நடுவில் தொங்கினீர் (மத் 27:38)
தழும்புகளால் நாம் சுகமாக (1பேதுரு 2:24)
தரணிதனில் வந்துதித்து ஜீவன் தந்தீரே(உம்)- (மத் 20:28)-சிலுவை

2

எங்கள் பாவ சாபங்களை ஏற்றீரே (ஏசாயா 53:4)
எங்கள் நோய்கள் துக்கங்களை சுமந்தீரே (ஏசாயா 53:4)
ஆக்கினையை ஏற்றுக்கொண்டீர் நீர் (மாற் 15:26)
சமாதானம் தந்து எம்மை வாழ வைத்தீரே(லூக்.24:36) சிலு

3

ஜீவ தண்ணீர் ஊற்றாம் எங்கள் இயேசுவே (எரே 2:13)
தாகம் தாகம் என்றீர் நீச சிலுவையில் (யோவான் 19:28)
உலகின் தாகம் தீர்த்திடவே நீர்
விலாவில் குத்த இரத்தமும் தண்ணீரும் ஈந்தீரே- சிலுவை
(யோவான் 19:34)